| (1) | (2) | (3) | (4) |
| --- | --- | --- | --- |

பணியமைப்பு - பொதுப்பணித்துறை - தமிழ்நாடு அமைச்சுப் பணி - கருணை அடிப்படையில் பணிநியமனம் - திரு. மு. ராஜேந்திரன், (த/பெ. காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு. அ. முருகன்) - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டது - பணிவரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

அரசாணை (3V) எண்.43 / பொதுப் பணி (ப1) துறை, நாள்: 22.07.2020

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.
2. தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம், தரமணி, சென்னை அவர்களின் கடிதம் எண். இ2(அ)/6159/2019, நாள். 17.12.2019.
3. அரசாணை (நிலை) எண். 18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள். 23.01.2020.

ஆணை :

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், பொதுப் பணித்துறையைச் சார்ந்த கட்டட (பராமரிப்பு) உபகோட்டம், தருமபுரி அலுவலகத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து வந்த திரு. அ. முருகன் கடந்த 17.08.2005 அன்று காலமானதைத் தொடர்ந்து, அவரது வாரிசுதாரர் / மகன் திரு. மு. ராஜேந்திரன் என்பவருக்கு முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது),

| (5) | (6) | (7) | (8) |
|---|---|---|---|

பொதுப்பணித்துறை, சென்னை அவர்களால் கருணை அடிப்படையில் தற்காலிக காவலர் உதவியாளர் பணி நியமனம் வழங்கப்பட்டு, தனியர் நிலநீர் வட்டம், தஞ்சாவூர் கட்டுப்பாட்டிலுள்ள நிலநீர் கோட்டம், சேலம் அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு 03.09.2018 முற்பகல் முதல் பணியேற்றுக்கொண்டு வருகிறார் என்றும், பத்தாம் வகுப்பில் (எஸ்.எஸ்.எல்.சி.) ஜூன் 2002 - இல் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், தனியாரின் பிறந்த தேதி 27.01.1986 என்றும் தெரிவித்து, தனியாரின் பணியினை வரன்முறை செய்வதற்குத் தேவையான அனைத்து அசல் சான்றிதழ்கள் / சான்றாவணங்களை அனுப்பி வைத்து, தனியாரின் பணியினை அவர் அப்பணியில் சேர்ந்த நாளான 03.09.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம், தரமணி, சென்னை அவர்கள் அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற்றவரின் பணியினை வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்படுவதாக ஆணையிடப்பட்டுள்ளது.

3. கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குவது தொடர்பாக, அரசாணை (நிலை) எண். 18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள். 23.01.2020 - இல் ஒருங்கிணைந்த வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன.

(1) (2) (3) (4)

4. மேலும் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம், தரமணி அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு கூர்ந்தாய்வு செய்தது. திரு.ஆ.ராஜேந்திரன், இளநிலை உதவியாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ள நிலையில், அவரது பணியினை தமிழ்நாடு அமைச்சுப் பணியில், நீர்வள ஆதாரத்துறையில், கருணை அடிப்படையில், பணியமர்த்தப்பட்ட நாளான 03.09.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், அவர் பணி நியமனத்திற்குரிய உத்தரவு பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன் தேதியிட்டு பணிவரன்முறை செய்வதால், ஊதிய உயர்வு / ஊதிய நிலுவை இருப்பின் தனியர் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவர் ஆகிறார்.

5. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அ.சா.எண்.6652/கீபூ2/2020-1, நாள்.26.05.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை அ.சா.எண்.12608/நி2/2020-1, நாள்.28.06.2020-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்

/ உண்மை நகல் /

[signature] 22/10/2020

செயற் பொறியாளர், பொ.ப.து
நிலநீர் கோட்டம்,
சேலம்-636 007
22/10/2020